**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**C.C.No.27/2014**
**Prosecution Witness P.W. 4**
.....

Name : திரு. முனீஸ்வரன் Caste :

Father's name : Calling :

Village : Religion :

Taluk : Age :

நாள் - **07.03.2025**

**(எதிரிகள் ஆஜரில்லை)**

**முதல்விசாரணை:**

நான் தற்சமயம் கள்ளிக்குடி காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2012 ம் தேதி நான் மேற்படி காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது காவல்ஆய்வாளர் அவர்கள் குற்ற எண்.503/2005 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட மீட்டரை நீதிமன்ற வேண்டுகோளுக்கு இணங்க தடய அறிவியல் ஆய்வகத்திற்கு 20.03.2012 ல் ஒப்படைத்து அறிக்கை செய்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்குவிசாரணை**

இந்த வழக்கில் எனக்கு கடவுச்சீட்டு வழங்கப்பட்டது. பணி முடித்து என்னென்ன வேலைகள் செய்தேன் கடவுச்சீட்டில் பதிவு செய்து என்று ஆய்வாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். நான் பெற்றுச் சென்ற மீட்டர் பெட்டி எங்கிருந்து பெறப்பட்டது என்றால் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து பெற்று ஒப்படைக்கப்பட்டது. நான் 19.03.2012 ம் தேதி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து வழக்குச் சொத்தை பெற்றேன். நான் மேற்படி வழக்குச் சொத்தை 16.03.2012 ம் தேதி நீதிமன்றத்தில் இருந்து பெற்றதாக வேண்டுகோள் கடிதத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். நான்

சொன்னபடி சொன்ன நேரத்தில் மேற்படி மீட்டர் பெட்டியை பெறவில்லை என்றும், அதை ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./- xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.